செய்தி வெளியீடு எண் 108 நாள் :18.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-I முதல்நிலை (Group-I Preliminary) எழுத்து தேர்வு மையங்களை கண்காணிக்க முதன்மை கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

~~~~~~~

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் 19.02.2017 அன்று முற்பகல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-Iன் முதல்நிலை (Group-I Preliminary) எழுத்து தேர்வு 10 தேர்வு கூடங்களில் 10 முதன்மை கண்காணிப்பாளர்களும், 176 அறை கண்காணிப்பாளர்கள் மற்றும் 10 ஆய்வு அலுவலர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர். 3524 விண்ணப்பதாரர்கள் எழுத உள்ளார்கள். இக்கூட்டத்தில் அனைத்து தேர்வு கூடங்களுக்கும், மாவட்ட கருவூலத்திற்கும் மற்றும் Mobile Team அலுவலர்களுக்கும், போதிய பாதுகாப்பு அளித்திட காவல் துறையினருக்கும், அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இத்தேர்விற்கு திருவள்ளூர் கோட்டாட்சியர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் தலைமையில் இரண்டு பறக்கும்படை குழுக்களும் இரண்டு நடமாடும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்வு நடைபெறும் தேர்வு கூடங்களுக்கு தடையில்லா மின்வசதி அளித்திடுமாறு மின்சார வாரிய அலுவலர்களுக்கும், போதிய அளவில் வாகன வசதியினை அளித்திடுமாறு அரசு போக்குவரத்துக் கழக மேலாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வில் கலந்துக்கொள்பவர்கள் செல்போன் மற்றும் கால்குலேட்டர் போன்ற எலக்ட்ரானிக் சாதனங்கள் எதையும் தேர்வு கூடத்திற்குள் எடுத்து வர அனுமதியில்லை என்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~~